**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி,**

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.

**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ஆம் நாள் வெள்ளி கிழமை**

**அசல் வழக்கு எண்.139/2012.ல்**

**வழக்கிடை மனு எண்.265/2025**

கவிதா ... மனுதாரர் / வாதி

..எதிர்..

1.அஞ்சலம் (இறந்தார்)
2.செல்வராசு
3.கார்த்திக்
4.சுதாமதி
5.கெங்காசலம்
6.சுப்ரமணியன்
7.பவுனாம்பாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.03.2024ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 22.11.2025ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.காமராசு அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். இம்மனு 28.02.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் கிடைக்கப்பெற்ற ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இறந்த 1ம் பிரதிவாதி அஞ்சலம் என்பவருக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் ஏற்பட்ட

அபேட்டை ரத்து செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்திரவிட வேண்டி, உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் ஆணை 22 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2. மனு சங்ககதிகளின் சுருக்கம்**

**2.1** மனுதாரர்அசல் வழக்கில் வாதி என்றும் மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பெயரில் வழக்கு தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் இருக்கையில் 1ம் பிரதிவாதி அஞ்சலம் கடந்த 08.07.2022ல் இறந்துவிட்டார் என்றும் 1ம் பிரதிவாதி அஞ்சலகத்திற்கு 2ம் பிரதிவாதி செல்வராசு, சுப்ரமணியன் என்ற மகன்களும், பவுனாம்பாள் என்ற மகளும் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்றும் மேற்படி செல்வராசு 2ம் பிரதிவாதியாக வழக்கில் உள்ளதால் சுப்ரமணியன் மற்றும் பவுனாம்பாள் ஆகியோர்களை அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க மேற்படி இறந்த 1-ம் பிரதிவாதி அஞ்சலம் என்பவருக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டு, படுத்த படுக்கையாகவே வீட்டிலிருந்தபடியே நாட்டு வைத்தியம் சிகிச்சை செய்து கொண்டதால், தன்னால் வழக்கறிஞரை சந்திக்க முடியாமல் போனது என்றும் தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், அதனால் உடன் காலத்தில் தன்னால் 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் அதனால் வழக்கு அபேட் ஆகிவிட்டது என்றும் மேற்படி அபேட்டை ரத்து செய்ய வேண்டியது அவசியமாவும் நியாயமாகவும் உள்ளது.  இல்லையேல் தனக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

**2.2** ஆகவே இந்நீதிமன்றத்தார்வர்கள் அருள்கூர்ந்து இம்மனுவை ஏற்று, இறந்த 1ம் பிரதிவாதி அஞ்சலம் என்பவருக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் ஏற்பட்ட அபேட்டை ரத்து செய்து கொண்டு, வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்திரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள்.

4. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

5.1 மனுதாரரர் தரப்பு வாதம் என்னவெனில் 1ம் பிரதிவாதி அஞ்சலம் கடந்த 08.07.2022ல் இறந்துவிட்டார் என்றும் 1ம் பிரதிவாதி அஞ்சலகத்திற்கு 2ம் பிரதிவாதி செல்வராசு, சுப்ரமணியன் என்ற மகன்களும், பவுனாம்பாள் என்ற மகளும் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்றும் மேற்படி செல்வராசு 2ம் பிரதிவாதியாக வழக்கில் உள்ளதால் சுப்ரமணியன் மற்றும் பவுனாம்பாள் ஆகியோர்களை அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க மேற்படி இறந்த 1-ம் பிரதிவாதி அஞ்சலம் என்பவருக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டு, படுத்த படுக்கையாகவே வீட்டிலிருந்தபடியே நாட்டு வைத்தியம் சிகிச்சை செய்து கொண்டதால், தன்னால் வழக்கறிஞரை சந்திக்க முடியாமல் போனது என்றும் தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்று வாதிடப்பட்டுள்ளது.

5.2 இவ்வழக்கின் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்கையில் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி அஞ்சலம் கடந்த 08.07.2022ல் இறந்துவிட்டார் என்றும் 1ம் பிரதிவாதி அஞ்சலத்திற்கு 2ம் பிரதிவாதி செல்வராசு, சுப்ரமணியன் என்ற மகன்களும், பவுனாம்பாள் என்ற மகளும் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவினை பொய் என்றோ அல்லது உண்மை தன்மை அற்றது என்றோ கூற முன்வரவில்லை. எனவே இறந்து போன 1ம் பிரதிவாதி அஞ்சலத்தின் பிரதிநிதிகள் என்பதாலும், மேற்படியாரின் வாரிசுகளை சேர்த்து அசல்

வழக்கினை மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கினை திறம்பட தீர்மானிக்க இயலும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.